



# ஆமையின் தந்திரம்







ஒரு நாள் மதிய வேளையில் வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. நரிக்கு மிகவும் பசியாக இருந்தது. அங்கும் இங்கும் ஓடியது. எதுவும் அகப்படவில்லை. பசி காதை அடைத்தது. நரி ஆற்றங்கரைக்கு வந்தது. கரையில் உட்கார்ந்தது. அப்போது ஆற்றில் ஒரு ஆமை கரை ஓரத்தில் நீந்திக்கொண்டிருந்தது. நரி 'திடும்' என்று பாய்ந்தது. ஆமையைப் பிடித்துவிட்டது. 'ஆகா மாட்டிக்கொண்டோமே! தப்பிக்க என்ன செய்வது?' என்று ஆமை துடித்தது. நரிக்கு ஆமையைச் சாப்பிடத் தெரியவில்லை. ஆமை முதுகில் உள்ள ஓடு பாறையைப்போல இருந்தது. நரி ஆமையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தது. ஆமையின் ஓட்டை உடைக்கத் தெரியவில்லை. நரி தலையைப் பிய்த்துக்கொண்டது. ஆமை பார்த்தது. தப்பிக்க இதுதான் சரியான நேரம் என்று ஒரு தந்திரம் செய்தது.






"நரியே! நான் இறப்பது நிச்சயம். ஆனால் என்னை உனக்கு சாப்பிடத் தெரியாது. அதை நானே சொல்லித் தருகிறேன்" என்றது ஆமை. "சரி! சீக்கிரம் சொல்" என்றது நரி. "என் ஓடு கல்லைப்போல இருக்கும். கடிக்க முடியாது. அதனால் என்னைத் தண்ணீரில் போடு. என் ஓடு தண்ணீரில் ஊறிப் பஞ்சுமிட்டாய்போல ஆகிவிடும். பிறகு என்னை எளிதாகச் சாப்பிடலாம்" என்றது ஆமை. "ஆகா! நல்ல யோசனை" என்று ஆமையைத் தண்ணீரில் போட்டது. நரிக்கு மிகவும் பசியாக இருந்ததால் யோசிக்க முடியவில்லை. அவ்வளவுதான்! ஆமை மகிழ்ச்சியுடன் தண்ணீரில் பாய்ந்தது. மின்னல் வேகத்தில் நீந்தியது. ஆற்றின் நடுப்பகுதிக்கு வந்துவிட்டது. அங்கிருந்து ஆமை, "கெக்கெக்கே... கூ... கூ... கெக்கெக்கே..." என்று மகிழ்ச்சியாகச் சிரித்தது. "நரியே! உன்னைவிடத் தந்திரம் உள்ள பிராணிகள் ஏராளம். தெரிந்துகொள்" என்றது ஆமை. எப்போதும் அடுத்தவர்களை ஏமாற்றும் நரி அன்று தானே ஏமாந்துபோனது.





பஞ்சதந்திரக் கதை
கதை சொன்னவர் : பாலாஜி சம்பத்
தயாரிப்பு : eureka books



# உள்ளதும் போனதே

ஒரு பணக்காரன் இருந்தான். அவன் ஒரு கஞ்சன். அவன் திருவிழா பார்க்கச் சென்றான். அங்கே அவனுடைய பணப்பை தொலைந்துவிட்டது. பையில் பத்தாயிரம் ரூபாய் இருந்தது. பணக்காரன் மிகவும் அதிர்ச்சி அடைந்தான். பணப்பையைத் தேடிப் பார்த்தான். கிடைக்கவில்லை.

"பணப்பையைக் கண்டுபிடித்து தந்தால் பரிசு" என்று அறிவித்தான்.

வேலன் பணப்பையைக் கண்டு எடுத்தார். அதைப் பணக்காரனிடம் கொடுத்து, "பரிசு தாருங்கள் ஐயா" என்று கேட்டார்.


பணக்காரன் வேலனை ஏமாற்ற நினைத்தான். அதற்கு ஒரு தந்திரம் செய்தான்.

“பையில் பத்தாயிரம் ரூபாயும், பத்து சவரன் நகையும் இருந்தது. பணத்தைத் தந்துவிட்டாய். நகை எங்கே? நீ எடுத்துக்கொண்டாயா?” என்று பணக்காரன் கேட்டான்.

வேலன் பயந்துவிட்டார்.

"பையில் நகை இல்லை. பணம் மட்டுமே இருந்தது. அதை அப்படியே உங்களிடம் தந்துவிட்டேன். சொன்னபடி பரிசு தாருங்கள்" என்றார்.





"ஒழுங்காக நகையைத் தா! பரிசு தருகிறேன். நகையைத் தரவில்லை என்றால் உன்மீது வழக்கு போடுவேன்" என்று பணக்காரன் மிரட்டினான்.

'பரிசு கிடைக்கும் என்று எதிர்பார்த்தால் நம்மீது திருட்டுப்பழி சுமத்துகிறார்களே!' என்று வருந்தினார் வேலன்.

இருவரும் நீதிபதியிடம் சென்றனர்.

பணக்காரன் "என் நகை வேண்டும்" என்று வேலனிடம் கூறியதையே நீதிபதியிடமும் சொன்னான்.

நீதிபதி புத்திசாலி. அவருக்கு யார் பொய் சொல்கிறார்கள் என்று தெரிந்துவிட்டது.



"உன் பையில் பத்தாயிரம் ரூபாயும் பத்து சவரன் நகையும் இருந்தன என்கிறாய். ஆனால் இந்தப் பையில் பணம் மட்டும் இருக்கிறது. நகை இல்லை. எனவே இது உன்னுடைய பை இல்லை. நீ போகலாம்" என்றார் நீதிபதி.

"உள்ளதும் போனதே" என்று பணக்காரன் புலம்பிக்கொண்டே சென்றான்.



கதையாக்கம் : கூத்தலிங்கம்
தயாரிப்பு : eureka books
An AID INDIA Education Initiative

# அழகான அம்மா


அரசர் நகர்வலம் வந்துகொண்டிருந்தார். அப்போது ஒரு குழந்தை, தெரு ஓரத்தில் நின்று அழுது கொண்டிருந்தது. அதைக் கண்டு அரசர் குதிரையிலிருந்து கீழே இறங்கினார். "ஏன் அழுகிறாய் பாப்பா?" என்று கேட்டார் அரசர்.

"எனக்கு என் அம்மா வேண்டும். எங்கோ தொலைந்துவிட்டாள்!" என்று அழுதது குழந்தை.

"உன் அம்மா எப்படி இருப்பார்கள் என்று சொல். நான் கண்டுபிடித்துத் தருகிறேன்" என்றார் அரசர்.

குழந்தை அழுகையை நிறுத்திவிட்டு, "என் அம்மா மிகவும் அழகாக இருப்பார்கள்" என்று சொன்னது.

உடனே, அரசர் அந்த ஊரில் இருக்கிற அழகான பெண்கள் அனைவரையும் வரவழைத்தார்.



குழந்தை ஒவ்வொருவரையும் பார்த்தது.

"இதில் யாரும் என் அம்மா இல்லை!" என்றது. அரசர் வருத்தம் அடைந்தார்.


அப்போது அரண்மனை வாசலில் பரட்டைத் தலையோடும், அழுக்கு உடையோடும் ஒரு பெண் நின்றாள்.



"ஐயா! அது என்னுடைய குழந்தை" என்றாள். அரசருக்கு கோபம் வந்தது.

"இந்தக் குழந்தையின் அழகான அம்மா நீயா? நீ பொய் சொல்கிறாய்!" என்று கோபத்துடன் கூறினார் அரசர்.

குழந்தை அந்தப் பெண்ணைப் பார்த்ததும் "அம்மா!" என்று கூப்பிட்டு மகிழ்ச்சியுடன் ஓடிவந்து கட்டிக்கொண்டது. அம்மாவும் குழந்தையை பாசத்துடன் அணைத்துக் கொண்டாள். அரசருக்கு உண்மையான அழகு எது என்று புரிந்தது.



கதை சொன்னவர்: சாமு
கதையாக்கம்: மு.முருகேஷ்
தயாரிப்பு : eureka books

# கல் சூப்



காவேரி தன் உறவினர்களைப் பார்க்க விரும்பினாள். உறவினர்கள் வீடு ரொம்ப தூரத்தில் இருந்தது. ஒரு நாள் காலையில் காவேரி ஊருக்குப் புறப்பட்டாள். அன்று பேருந்து வரவில்லை. நடந்தே செல்லலாம் என்று முடிவு செய்தாள் காவேரி. மாலை ஆனது. இருட்டிவிட்டது. நன்றாகப் பசி எடுத்தது. உதவி கேட்பதற்காக ஒரு வீட்டின் கதவைத் தட்டினாள். ஒரு பாட்டி கதவைத் திறந்தாள். அந்தப் பாட்டியோ கருமி. பக்கத்து வீட்டில் நெருப்பு கேட்டால்கூட கொடுக்க மாட்டாள்.

“சாப்பிட ஏதாவது கிடைக்குமா?” என்று கேட்டாள் காவேரி.

“அடடே! எதுவும் இல்லையம்மா... வீட்டில் தானியங்கள்கூட இல்லை. நானே இரண்டு நாட்களாகப் பட்டினிதான்” என்றாள் பாட்டி. காவேரி பாட்டியை உற்றுப் பார்த்தாள். பட்டினி கிடந்ததுபோல் தெரியவில்லை.

“விடு பாட்டி. நான் கல் சூப் வைத்துக் குடிக்கிறேன்” என்றாள் காவேரி.

“என்னது கல் சூப்பா?! அப்படி என்றால் என்ன?”

“செய்கிறேன் பார் பாட்டி” என்றாள்.

‘தினமும் கற்களை வைத்து சூப் செய்து குடித்தால் இன்னும் செலவு குறையுமே!’ என்று கருமிப்பாட்டி யோசித்தாள். உடனே பாத்திரங்களைக் கொடுத்தாள்.





காவேரி சட்டியில் ஒரு கல்லைப் போட்டாள். அதில் நீரை ஊற்றினாள். அடுப்பில் வைத்தாள். கரண்டியால் கிண்டினாள். நாக்கில் விட்டு ருசி பார்த்தாள். “மிகவும் நன்றாக இருக்கிறது. கொஞ்சம் காரட்டும், பீன்சும் இருந்தால் இன்னும் சுவையாக இருக்கும்” என்றாள்.

“இதோ கொண்டு வருகிறேன்” என்று பாட்டி எடுத்து வந்தாள். அவற்றை நறுக்கி கொதிநீரில் போட்டாள் காவேரி.

“கொஞ்சம் வெங்காயம் இருந்தால் நன்றாக இருக்குமே” என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள்.

பாட்டி உடனே வெங்காயம் எடுத்து வந்தாள்.

காவேரி இடையிடையே ருசி பார்த்துக் கொண்டாள்.

கொஞ்சம் பருப்பு, தக்காளி, மிளகாய் இப்படி ஒவ்வொன்றாகப் பாட்டியிடமிருந்து வாங்கிக் கொண்டாள்.

“சூடான கல் சூப் தயாராகிவிட்டது!” சந்தோசமாகக் கத்தினாள். பாட்டிக்கு நாவில் எச்சில் ஊறியது.

“எனக்கும் கொஞ்சம் வேண்டும்” என்று கேட்டாள் பாட்டி.

இருவரும் சாப்பிட்டார்கள். “கல்லைப் போட்டே சூப் வைத்து விட்டாயே! இப்படி ஒரு சூப்பை நான் சாப்பிட்டதே இல்லை” என்று பாட்டி ஆனந்தமாகச் சொன்னாள்.






‘இதுபோல் எத்தனை பேரைப் பார்த்திருப்பேன்’ என்று நினைத்தபடி மனதுக்குள்ளே சிரித்துக்கொண்டாள் காவேரி.

கதை சொன்னவர் : அனிதா
கதையாக்கம் : ரத்தினவிஜயன்
தயாரிப்பு : eureka books

# வண்ண வீடு

செல்வி விளையாட்டுப் பெண். நண்பர்களுடன் தெருவில் நாள் முழுவதும் விளையாடிக்கொண்டே இருப்பாள்.

ஒருநாள் செல்வியின் அம்மா ஊருக்குக் கிளம்பினாள். உடனே செல்வி, "நான் இன்று கவிதா வீட்டிற்கு விளையாடச் செல்கிறேன்" என்றாள். "என்ன செல்வி மறந்துவிட்டாயா? நீ இன்று நம் வீட்டிற்கு வண்ணம் தீட்டுவதற்கு ஒப்புக்கொண்டாயே! நான் சீக்கிரம் திரும்பி வந்துவிடுவேன். ஊரிலிருந்து உனக்கு அழகான சட்டை ஒன்றை வாங்கி வருகிறேன்" என்று கூறிவிட்டு அம்மா புறப்பட்டாள்.



செல்வி வீட்டிற்கு வண்ணம் தீட்ட ஆரம்பித்தாள். அப்போது அவள் நண்பன் டேவிட் அங்கே வந்தான். "நானும் வண்ணம் தீட்டுகிறேன்" என்று குதித்தான். "வண்ணம் தீட்டுவது சுலபமான வேலை அல்ல. உன்னால் முடியாது!" என்று செல்வி கண்டிப்பாக சொன்னாள். "எனக்கு ஒரே ஒரு வாய்ப்பு கொடு" என்று கெஞ்சினான் டேவிட்.


“சரி! நீ வண்ணம் தீட்டலாம். ஆனால் அதற்கு எனக்கு நீ ஒரு மிட்டாய் தர வேண்டும்” என்றாள் செல்வி. டேவிட்டும் தன் பையில் இருந்த மிட்டாயை செல்வியிடம் கொடுத்தான். செல்வி மகிழ்ச்சியாக மிட்டாய் சாப்பிட்டுக்கொண்டே டேவிட் வண்ணம் தீட்டுவதை ரசித்தாள்.

சிறிது நேரத்தில் குமார், கீதா, கலா மூவரும் அங்கே வந்தார்கள். மூவருக்கும் வண்ணம் தீட்ட ஆசை வந்தது. செல்வி அவர்களிடம் முறுக்கு மற்றும் கடலை மிட்டாய் வாங்கிக்கொண்டாள். எல்லோரும் சேர்ந்து வண்ணம் அடித்தார்கள்.



செல்வி முறுக்கை சாப்பிட்டுக்கொண்டு வேடிக்கைப் பார்த்தாள். அவள் வேலை செய்யவே இல்லை. உட்கார்ந்துகொண்டே எல்லோரிடமும் வேலை வாங்கிவிட்டாள்.

ஊரிலிருந்து அம்மா திரும்பி வந்தாள். வீட்டைப் பார்த்து அசந்துபோனாள். வீடு வண்ணமயமாக இருந்தது. அம்மாவுக்கு ஒரே சந்தோசம். செல்வியைக் கட்டி அணைத்துக்கொண்டு புதிய சட்டையை பரிசாக அளித்தாள்.



கதையாக்கம்: மு.முருகேஷ்
தயாரிப்பு : eureka books
An AID INDIA Education Initiative


# இரு கோடுகள்





பீட்டருக்கு மிகவும் யோசனையாக இருந்தது. இன்று பள்ளியில் ஆசிரியர் கேட்ட கேள்விக்கு யாருக்குமே பதில் தெரியவில்லை. அதைப்பற்றிய நினைவிலேயே உட்கார்ந்திருந்தான். பீட்டரின் பாட்டி, "சாப்பிட வா..." என்று அழைத்தாள். பாட்டிக்கு மிகவும் வயதாகி இருந்தது. கண், காது எல்லாமே சரியாக வேலை செய்வதில்லை.

பாட்டிக்கு பீட்டரிடம் கொள்ளைப் பிரியம். "பாட்டி, பேசாமல் இருங்கள். நான் பாடத்தைப்பற்றி முக்கியமாக யோசித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு சாப்பாடு வேண்டாம்" என்றான் பீட்டர். "ஏன் கோபிக்கிறாய்? பட்டினி கிடந்தால் படிப்பு வருமா" என்ற பாட்டியும் விடாமல் கெஞ்சினாள்.



"அட! நானே என் ஆசிரியர் கேட்ட கேள்விக்கு விடை தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன். நாளைக்கு கண்டிப்பாக விடையைச் சொல்ல வேண்டும். அதெல்லாம் உங்களுக்குப் புரியாது" என்று அலுத்துக் கொண்டான் பீட்டர். "எனக்காக ஒரு வாய் சாப்பிடு" என்றாள் பாட்டி மறுபடியும்.

"அப்படியென்றால், நீங்கள் எனக்காக பாடத்தில் உதவி செய்வீர்களா?" என்று பதிலுக்குக் கிண்டலாகக் கேட்டான்.

"சரி, செய்கிறேன். நீ முதலில் சாப்பிடு" என்றாள் பாட்டி. பீட்டர் சிரித்துவிட்டான். பாட்டிக்கு ஒன்றுமே தெரியாது என்று நினைத்துக் கொண்டான்.


"என்ன! நீங்கள் உதவி செய்கிறீர்களா? உங்களுக்கு எழுதப் படிக்கக் கூடத் தெரியாது... என்னை சாப்பிட வைக்கப் பொய் பேசுகிறீர்களே?" என்று மடக்கினான்.

"சரி, உன் பாடத்திலே என்ன கேள்வி? அதை முதலில் சொல்" என்று கேட்டாள் பாட்டி.

பீட்டர் "இதோ பாருங்கள், எங்கள் வாத்தியார் ஒரு கோடு வரைந்துள்ளார். இதை சிறியதாக்க வேண்டும். ஆனால் அழிக்கக் கூடாது. அதெப்படி முடியும்?" என்றான் பீட்டர்.

" இவ்வளவு தானா விசயம்?" என்ற தன் பொக்கைவாயைக் காட்டிச் சிரித்தாள். பின் பீட்டரின் பென்சிலை எடுத்து, ஏற்கனவே வரைந்திருந்த கோட்டிற்குப் பக்கத்திலே, அதைவிடப் பெரியதாக இன்னொரு கோடு வரைந்தாள். "இப்போது உங்கள் ஆசிரியர் வரைந்த கோடு சிறியதாகி விட்டதா?" என்றாள்.

"இந்தப் பாட்டிக்கா ஒன்றும் தெரியாது என்று நினைத்தேன் நான்...." என்று எண்ணி அசந்துபோய் மூக்கில் விரல் வைத்தான் பீட்டர்.



கதையாக்கம் : எம்.பி.அகிலா
தயாரிப்பு : eureka books